01-12-2013 Dinamalar

# கத்திப்பாராவில் 'கேண்டிலீவர்' பாலம் கட்டுமான பணி விரைவில் நிறைவடையும்




கிண்டி கத்திப்பாரா மேம்பாலம் அருகே, ஹைட்ராலிக் முறையில் பாலத்தை இணைக்கும் இறுதிகட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, டிச. 1–

கத்திப்பாரா அருகே, 'கேண்டிலீவர்' தொழில்நுட்பத்தில், நடந்து வரும் பாலம் கட்டுமான பணி, 10 நாட்களில் முடியும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்பேடு – பரங்கிமலை இடையே, மெட்ரோ ரயில் பாதையில், கத்திப்பாரா பாலம் – நூறடி சாலை, ஜி.எஸ்.டி., சாலை – ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தை இணைக்கும் வகையில், கடந்த ஏப்ரலில், 'கேண்டிலீவர்' தொழில் நுட்பத்தில், 177 மீ., துாரம் பாலம் கட்டும் பணி துவங்கியது.

இதில், நூறடி சாலை, ஜி.எஸ்.டி., சாலையின் மீது, இடையில் துாண்கள் இன்றி, 75 மீ., இடைவெளியில், 'கேண்டிலீவர்' தொழில்நுட்பத்தில், மெட்ரோ ரயில் பாலம் கட்டப்பட்டு வருகிறது. தற்போது அதில், 72 மீ., துாரம் பாலம் கட்டப்பட்டு விட்டது.

மீதம் உள்ள, 3 மீ., நீளம் பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது. 'அந்த பணி இன்னும் 10 நாட்களுக்குள் முடிந்து விடும்' என, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரி கூறினார்.